# கள்ளக்குறிச்சி நகராட்சி

## நகர் மன்ற சாதாரணக் கூட்டம்

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" குறள்...

**கூட்டம் எண். 04 / 2025** **நாள். 08. 05.2025**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர் வரும் 15.05.2025 ஆம் தேதி வியாழன் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் மன்ற தலைவர்
கள்ளக்குறிச்சி நகராட்சி

## கூட்டபொருள்

**பொருள் எண் : 01**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், நகராட்சியில் **பள்ளி மேம்பாட்டு மான்யம் திட்டம், இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி 2024-2025 (School Improvement Grant, O & M Works)**-ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E-Tendering) முறையில் 09.04.2025-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஏமப்பேர் காலணி பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி | ரூ. 20,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | ரூ.18,65,599/- 0.07% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.19,30,598/- 3.41% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கருணாபுரம் கிழக்கு தெரு பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி | ரூ. 20,00,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | ரூ.18,65,599/- 0.07% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.19,30,598/- 3.41% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஏற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்டநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 300 / 2025 / இ1)**

**பொருள் எண் : 02**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **15வது நிதிக்குழு மானியம் (Tied Grant & Untied Grant) 2023-2024**ஆம் ஆண்டின் கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E-Tendering) முறையில் 28.03.2025-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| **(2023-2024 Tied Grant)** | | | | |
| 1 | துருகம் சாலையில் உள்ள நகராட்சி நுண் உர மையம் யூனிட்-2க்கு தேவையான அரவை இயந்திரம் மற்றும் கன்வேயர் இயந்திரம் (Shredder Machine with Conveyor) கொள்முதல் செய்தல் பணி | ரூ. 5,00,000/- | M/s MRR Suppliers Chennai-19 | **ரூ.4,98,500/- 0.30% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s Rajeswari & Nathan Chemicals & Traders, Chennai-11 | ரூ.5,01,500/- 0.30% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2 | நகராட்சி நுண் உர மையங்களுக்கு தேவையான Fly Catcher, Napkin Incinators, Weighing Scale, Fire Equipment's ஆகியவை கொள்முதல் செய்தல் பணி | ரூ. 5,00,000/- | M/s MRR Suppliers Chennai-19 | **ரூ.4,98,660/- 0.61% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s Rajeswari & Nathan Chemicals & Traders, Chennai-11 | ரூ.5,40,000/- 9.10% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் சாலை நுண் உர மையம் அலகு-1 & 2 மற்றும் நகராட்சி அலுவலக வளாக நுன் உர மையங்களில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | ரூ. 10,00,000/- | திரு.M.சரோஜா, கள்ளக்குறிச்சி | **ரூ.9,68,485/- 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ. 10,06,581/- 3.83% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| **(2023-2024 Untied Grant)** | | | | |
| 4 | திருவரங்கம் நகர் முகப்பு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | ரூ. 4,00,000/- | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | **ரூ.3,74,797/- 0.06% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு.T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | ரூ.3,91,170/- 4.31% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5 | அக்ரஹாரா தெரு (042020R236) மற்றும் அக்ரஹாரா சந்து (042020R237) பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மறுசீரமைப்பு பணிகள் செய்தல் | ரூ. 10,00,000/- | திருமதி.M.சரோஜா, கள்ளக்குறிச்சி | **ரூ.9,66,458/- 0.06% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.10,09,844/- 4.42% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6 | கச்சேரி சாலை மற்றும் அண்ணா நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு தேவையான தானியங்கி குளோரினேஷன் (Automatic Spot Chlorination Unit) கொள்முதல் செய்தல் | ரூ. 3,75,000/- | M/s Sri Rajaganapathy Engineering Works Chennai-54 | **ரூ.3,61,552/- 1.14% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | M/s Sabari Engineering Chennai-54 | ரூ.3,68,750/- 0.83% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 7 | காட்டுபுரி தக்காவில் உள்ள கிணற்றை தூர் நீக்கி, பராமரிப்பு பணி மற்றும் UPVC குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணி | ரூ. 3,50,000/- | திரு.T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | ரூ.3,27,102/- 0.23% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.3,40,076/- 3.73% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8 | கேசவலு நகர் மேல்நிலை நீர் தேக்க தொட்டியிலிருந்து மாசிலாமணி நகர் தெருவிற்கு குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கும் பணி | ரூ. 5,00,000/- | திரு.T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | ரூ.4,58,211/- 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.4,69,616/- 2.30% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9 | வைஷ்ணவி நகர் சாலை (042013R057) முகப்பு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | ரூ. 1,75,000/- | திரு.J.முஸ்தபா கள்ளக்குறிச்சி | ரூ.1,66,948/- 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.1,70,893/- 2.26% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 10 | சித்தேரி தெருவில் முருகன் கோவில் முன்புறம், அகரத்தான் கொல்லை தெரு மற்றும் பெருமாள் கோவில் தெரு பின்புறம் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் அமைத்தல் பணி | ரூ. 4,50,000/- | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.4,37,097/- 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | ரூ.4,47,692/- 2.30% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 11 | கருணாபுரம் புதிய காலணி பகுதியில் உள்ள சமுதாய கூடத்தின் முதல் தளத்தில் உணவு அருந்தும் கூடம் அமைக்கும் பணி | ரூ. 5,25,000/- | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.4,97,925/- 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | ரூ.5,19,867/- 4.25% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஏற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்டநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 1258 / 2024 / இ1)**

**பொருள் எண் : 03**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய்நிதி 2024-2025ஆம் ஆண்டில், கள்ளக்குறிச்சி நகராட்சியில் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 27.03.2025-ம் தேதி அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (மதிப்பீட்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சியில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க கள்ளக்குறிச்சி வட்டம் ஏமப்பேர் கிராம புல எண். 51,52, 54,57, 59,60, 62,63 மற்றும் 66-ல் புறநகர் பேருந்து நிலையம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் பணி | M/s Terra Amata Design Consortium S2, Royal Court Blossom Avenue Mahindra World City Chennai- 603 002 | 1.98% |
| | | Thiru.Karunamoorthy Thoothukudi-628 002 | 3.00% |
| 2. | கள்ளக்குறிச்சி சர்வே எண்.474/2ல் புதிய தினசரி நாளங்காடி மற்றும் வாகன நிறுத்ததுடன் கூடிய வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் பணி | M/s TD Engineering and Consulting Pvt.Ltd Chennai | 1.90% |
| | | M/s CAPITAL ENGINEERING CONSULTANCY PRIVATE LIMITED, CHENNAI | 2.00% |
| 3. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் அமைந்துள்ள பிரதான மழைநீர் வடிகால்வாய் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் பணி | M/s CAPITAL ENGINEERING CONSULTANCY PRIVATE LIMITED, CHENNAI | 1.60% |
| | | M/s Glency Docmra Consultants India Private Limited, Chennai-91 | 1.80% |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிகளுக்கு வரப்பெறும் பட்டியல் படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 070 / 2025 / இ1)**

**பொருள் எண் : 04**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ்** குடிநீர்நிதி 2024–2025 ஆம் ஆண்டில், கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 16.04.2025–ம் தேதி அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை (மதிப்பீட்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் உள்ளூர் நீர் ஆதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் இதர குடிநீர் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி | M/s Terra Amata Design Consortium S2, Royal Court Blossom Avenue Mahindra World City Chennai– 603 002 | 1.85% |
| | | M/s Square Architects Coyembed, Chennai – 600 107 | 2.25% |
| | | M/s JPR Architects and Engineers Madhuravoyal, Chennai | 2.50% |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s Terra Amata Design Consortium, சென்னை அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி நககர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமிதி பெற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 371 / 2025 / இ1)**

**பொருள் எண் : 05**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் 26 எண்ணிக்கையில் சமுதாய கழிவறை மற்றும் 3 எண்ணிக்கையில் பொதுக்கழிவறைகள் என மொத்தமாக 29 எண்ணிக்கை கழிவறைகள் உள்ளது.

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில்தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் நடைப்பெற்றுவரும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் திரவகழிவு மேலாண்மை பணிகளை மதிப்பீடு செய்து திறந்தவெளியில் மலம் கழிக்காத நகராட்சி என்றும், குப்பையில்லா நகராட்சி என்றும் சான்று வழங்குவதற்கு கள ஆய்வுப்பணி Swachh Survekshan 2023–2024 நடைப்பெற்று வருகிறது.

எனவே, மேற்படி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சமுதாய மற்றும் பொதுக்கழிவறைகளில் உள்ள பழுதுகள், தண்ணிர் வசதிகள், மின் வசதிகள், மின்விளக்கு வசதி மற்றும் இதர பழுதுகள் நீக்கம் ஆகிய பணிகள் செய்து தர வேண்டி சுகாதார அலுவலர் அவர்களின் 02.05.2025ஆம் தேதிய குறிப்பில் கோரியுள்ளார்.

எனவே மேற்படி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.15,00,000/–(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 516 / 2025 / இ1)**

## பொருள் எண் : 06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கு சிறுவர் நீச்சல் குளம், பூங்கா வசதி மற்றும் படகு சவாரி ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்படி, குளத்தினை ஆய்வு செய்த நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோர் குளத்திற்கு வரும் பொதுமக்களுக்கு மேலும் பொழுதுபோக்கு அம்சங்களை மேம்படுத்திடவும், குளத்திற்கு எப்போதும் நீர் நிரம்பி உள்ள வகையில் அருகில் உள்ள ஏரி பகுதியில் இருந்து நீர் கொண்டுவந்த நிரப்ப 5" inch Pipe Line வசதிகள் அமைத்தும், வேஸ்ட்டு வாட்டர் வெளியேறும் வகையில் வடிகால் அமைக்கவும், படகு சவாரி பகுதியில் பொதுமக்கள் நிறுத்ததிற்கு மேற்கூரைகள் அமைக்கவும், அப்பகுதியில் ஏற்கனவே, அமைக்கப்பட்டுள்ள கலையரங்கத்தில் பொழுதுபோக்கிற்கு துப்பாக்கி சுடும் போட்டிகள் நடத்திட துப்பாக்கிகள் கொள்முதல் செய்யவும், பொதுமக்கள் அமர்வதற்கு இருக்கை வசதிகள் செய்யவும் மற்றும் இதர அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தினர்.

எனவே மேற்படி ஏமப்பேர் குளத்தில் தேவையான தண்ணிர் வசதி மற்றும் இதர அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0559 / 2025 / இ1)**

**பொருள் எண் : 07**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சுந்தரவிநாயகர் கோவில் தெருவில் உழவர் சந்தை பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி, சுந்தரவிநாயகர் கோவில் தெரு பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் பிரதான சாலை பகுதியாக இருந்து வருகிறது. உழவர் சந்தைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தங்களின் வாகனங்களை உழவர் சந்தைக்கு வெளியில் நிறுத்துவதால் அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெறிசல் ஏற்பட்டு பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் நிலையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் மேற்படி உழவர் சந்தையை ஆய்வு செய்த நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோர் உழவர் சந்தைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தங்களின் வாகனங்களை வெளியில் நிறுத்துவதை தடுக்கும் வகையில் உழவர் சந்தையின் உட்புற பகுதியில் வாகனம் நிறுத்தும் வசதி அமைத்து அப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெறிசலை கட்டுபடுத்த இயலும் என்பதால் வாகனம் நிறுத்தும் வசதி அமைத்து தர அறிவுறுத்தினர்.

எனவே மேற்படி உழவர் சந்தையின் உட்புற பகுதியில் வாகனம் நிறுத்தும் வசதி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0560 / 2025 / இ1)**

**பொருள் எண் : 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண்.57, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.02.05.2023ன் படி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது செயல்பட்டு வருகிறது. தேர்வு நிலை நகராட்சிக்கு ஏற்ப அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டங்கள், அலுவலக அறிக்கைகள் என அனைத்து பணிகளும் கணிணி மையமாக்கப்பட்டு வருவதால் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் அலுவலகப்பணிகளுக்கு தேவையான கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண்.0561 / 2025 / இ1)**

**பொருள் எண் : 09**

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண்.57, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.02.05.2023ன் படி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது செயல்பட்டு வருகிறது. தேர்வு நிலை நகராட்சிக்கு ஏற்ப அலுவலர்கள் மற்றும் பணியாளர் பணியிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்து தர வேண்டியுள்ளது. மேலும், பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் நகர்மன்ற தலைவர் ஆணையாளர் ஆகிய அலுவலர்களின் அறைக்கு குளிர்சாதன வசதிகள், மின் விசிறி வசதிகள் அமைக்கவும், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கையாளும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்திருக்க தேவையான பீரேகள், இரும்பு அடுக்கு ரேக்குகள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், அனைத்து பிரிவிலும் உள்ள இதர பழுதுகள் நீக்கம் செய்து தரும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் மற்றும் இதர பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0562 / 2025 / இ1)**

**பொருள் எண் : 10**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18-ல் கவரை தெரு SVKநகர் இணைப்பு சாலைப்பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு சுமார் பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. இச்சாலை பழுது ஏற்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும், அச்சாலையை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 22.04.2025ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, பகுதியில் ஆய்வு செய்ததில் அப்பகுதியில் பழுதடைந்த சாலையை மறுசீரமைப்பு செய்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு உகந்த வகையில் மறுசீரமைப்பு பணிகள் செய்யது தர வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே மேற்படி பழுதடைந்த சிமெண்ட் சாலையை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0563 / 2025 / இ1)**

**பொருள் எண் : 11**

அரசாணை (4D) எண். 31, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–3) துறை, நாள். 25.10.2024–ல் கள்ளக்குறிச்சி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு ரூ. 153.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணியில் கழிவு நீர் உந்து நிலையங்கள் (Lifting Stations) 6 எண்ணிக்கையிலும், பிரதான கழிவு நீரேற்று நிலையம் (Main Pumping Station) கீழ்க்கண்ட பகுதிகளில் அமைப்பதற்கு திட்ட அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கழிவு நீர் உந்து நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் | சர்வே எண் | நில உரிமை விவரம் |
|---|---|---|---|
| 1. | க.மாமனந்தல் சாலை | 85 | நெடுஞ்சாலைத் துறை |
| 2. | சங்கராபுரம் சாலை GKM நகர் | 245/5, 6, 9, 11, 246/4, 247/1, 2A, 2B, 3, 286/1, 4, 5, 6 | நகராட்சி பூங்கா |
| 3. | R.J.S. நகர் | 77/2A1A1, 83/1, 2, 84/1A, 84/2A1, 86/1 | நகராட்சி பூங்கா |
| 4. | ஏமப்பேர் பிள்ளையார் கோவில் தோப்பு | 126 | அரசு புறம்போக்கு |
| 5. | ஜெயா கார்டன் (சித்தேரி கரை பகுதி ஒட்டி) | 321 | நீர்வள துறை |
| 6. | நாகப்பிள்ளை நகர் | | நகராட்சி பூங்கா |

| வ. எண். | பிரதான கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் | சர்வே எண் | நில உரிமை விவரம் |
|---|---|---|---|
| 1. | துருகம் சாலை மயானம் | 161/8 | நகராட்சி மயானம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க. எண்.2226 / 2021 / இ2)**

**பொருள் எண் : 12**

கள்ளக்குச்சி நகராட்சியில் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் / பணி செய்தவர்கள் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பணிக்கு பயன் படுத்தும் லாரி TN 32 P 3612 என்ற வாகனத்திற்கு மின்கலன் (Battery) புதியதாக மாற்றியமைத்தல் | திரு.S.வேல்முருகன்<br>ஓட்டுநர், கள்ளக்குறிச்சி நகராட்சி | ரூ.12,500/– |
| 2 | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்தும் திட்டப்பணியில் கழிவு நீர் உந்து நிலையங்கள் (Lifting Stations) 6 இடங்களில், பிரதான கழிவு நீரேற்று நிலையம் (Main Pumping Station) ஒரு இடத்தில் விளம்பர பதாகைகள் அமைத்தல் பணி. | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்,<br>நெ.127 A, வ,உ,சி,நகர்,<br>கள்ளக்குறிச்சி – 606 202. | ரூ.30,000/– |
| 3 | ஹோட்டல் தமிழ்நாடு திருச்சிக்கு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் பயிற்சியில் கலந்துக்கொள்ள வாகன வசதி ஏற்பாடு செய்தல் | திரு.அஹகமது இலியாஸ்<br>கள்ளக்குறிச்சி<br>(தரணி டிராவல்ஸ்) | ரூ.12,000/– |
| 3 | கள்ளக்குறிச்சி நகராட்சி தெருமின் விளக்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பயன்பாட்டில் உள்ள TN 15 ME 4951 என்ற Tata Acc வாகனம் பழுது நீக்கம் செய்தல் பணி (Quotation Rate.ரூ.15789) | திரு.S.வேல்முருகன்<br>ஓட்டுநர், கள்ளக்குறிச்சி நகராட்சி<br><br>(பழுது நீக்கப்பணி முடிக்கப்பட்ட பின் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 22,145/–) | ரூ.22,145/– |

மேற்படி விவரப்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளை ஒப்படைப்பு பணியாகவும், நேரடியாகவும் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டில் படி செலவுத் தொகையை பணி செய்த ஒப்பந்ததாரருக்கும், பணி செய்த பணியாளருக்கும் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0261 / 2025 / இ1)**

**பொருள் எண் : 13**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19–ல் விஜயலட்சுமி நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் அமைக்கப்பட்ட சமுதாய கூடத்திற்கு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு கழிவறை வசதி, சமையலறை மற்றும் உணவு அருந்தும் இடம் அமைக்கும் பணிகள் செய்து தர வேண்டி 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 14.11.2024–ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு கூடுதல் வசதிகள் கழிவறை வசதி, சமையலறை மற்றும் உணவு அருந்தும் இடம் ஆகிய வசதிகள் அமைக்கும் பணிகள் செய்யது தர வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே மேற்படி சமுதாய கூடத்திற்கு கூடுதல் வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 2196 / 2024 / இ1)**

**பொருள் எண் : 14**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07–ல் சங்கராபுரம் பிரதான சாலை கோட்டைமேடு பகுதியில் உள்ள சந்தில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு சுமார் பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை பழுது ஏற்பட்டு பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும், அவற்றை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 07–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 24.03.2025ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, பகுதியில் ஆய்வு செய்ததில் அப்பகுதியில் பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்த வகையில் மறுசீரமைப்பு பணிகள் செய்யது தர வேண்டியது மிகவும் அவசிய தேவையாக உள்ளது.

எனவே மேற்படி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0317 / 2025 / இ1)**

**பொருள் எண் : 15**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **பள்ளி மேம்பாட்டு மான்யம் திட்டம் 2024–2025 (School Improvement Grant)** கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E–Tendering) முறையில் 27.03.2025–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஏமப்பேர் காலணி நகராட்சி தொடக்க பள்ளியில் சுற்றுசுவர், குடிநீர் வசதி மற்றும் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ. 34,50,000/– | திரு.J.முஸ்தபா கள்ளக்குறிச்சி | ரூ.32,97,037/– 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன் ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.33,85,461/– 2.56% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | ஏமப்பேர் நகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் பெண்கள் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 14,20,000/– | திரு.M.சரோஜா, கள்ளக்குறிச்சி | ரூ.13,55,933/– 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.14,08,899/– 3.91% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | சேலம் பிரதான சாலையில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் பெண்கள் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 17,00,000/– | திரு.M.சரோஜா, கள்ளக்குறிச்சி | ரூ.16,12,511/– 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ. 16,71,906/– 3.68% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4 | ஏமப்பேர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் குடிநீர் வசதி, ஆண்கள் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 17,00,000/– | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன் ஸ் கள்ளக்குறிச்சி | ரூ.16,12,289/– 0.13% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.16,64,614/– 3.11% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஏற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்டநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 085 / 2025 / இ1)**

**பொருள் எண் : 16**

ஒன்றிய அரசின் விலங்குகள் நலவாரியம், அரசு செயலர், தமிழ்நாடு மாநில அரசின் கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை அவர்களின் கடித எண்.1082/AH3-2/2025 நாள்.03.03.2025, இயக்குநர், கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப்பணிகள் இயக்குநர் சென்னை -35 அவர்களின் சுற்றறிக்கை எண்.J1/2025 நாள்.11.03.2025 மற்றும் மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்பு துறை விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்.1032/ஆ2/2025-1 நாள்.21.03.2025 ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சி பகுதியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்படுத்துதல் (ABC) நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், விலங்குகள் வதை தடுப்புச்சட்டம் 1960 (சட்டம் எண்.59, 1960)ன் படி தெரு நாய்கள் / சமூக நாய்கள் உள்ளிட்ட மனிதாபிமான அணுகுமுறையுடன் கையாளப்பட வேண்டும். மேலும், தெரு நாய்களின் விரைவான இனப்பெருக்கம் காரணமாக மனிதர்கள் மற்றும் வீட்டு விலங்குகள் மிகவும் பாதிப்படைகிறார்கள் என்பதால் விலங்குகளின் பிறப்பு கட்டுப்படுத்துதல் பணி தீவிரபடுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்டம் கடந்த 01.04.2025 அன்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சிப்பகுதியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்படுத்துதல் (ABC) மையம் அமைக்கும் வரையில் அனைத்து வார்டு பகுதியிலும் கால்நடை மருத்துவருடன் ஆலோசித்து தெருநாய்கள் மற்றும் வீட்டு நாய்களுக்கு தடுப்பூசி முகாம் (ARV -Anti Rabies Vaccination) நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி முகாமிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 351 / 2025 / எச்1)**

**பொருள் எண் : 17**

மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்பு துறை விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்.1032/ஆ2/2025-1 நாள்.21.03.2025 ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகரப்பகுதியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்படுத்துதல் (ABC) நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்டம் கடந்த 01.04.2025 அன்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகரப்பகுதியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்படுத்துதல் (ABC) மையம் அமைக்கும் வரையில் அனைத்து வார்டு பகுதியிலும் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் நாய்கள் விபரத்தினை கணக்கெடுப்பு எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், தெருநாய்களை பிடிப்பதற்கு தேவையான கருவிகள் மற்றும் வலை ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்படி கணக்கெடுப்பிற்கு தேவையான படிவங்கள், எழுதுகோல், ஆட்கூலி, நாய் பிடிப்பதற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.351 /2025/எச்1)**

**பொருள் எண் : 18**

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2025–2026ஆம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினிகள், தளவாட சாமான்கள், பாதுகாப்பு உபகரணங்கள், எரிபொருள் செலவினம், வாகன பழுதுநீக்கம், தகுதிசான்று செலவினங்கள், வாகன எண்.TN32AV0727, TN32AU1335, TN32AV0552, TN38DE 2588, TN15ME 4936, TN15MF1101, Kubeta Mini JCB, Fogging Machine, பொதுமக்களுக்கு நகராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான சேவைகள் குறித்தும், தொற்றுநோய் , தொற்றாநோய் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மழைநீர் வடிகால் தூர்வாருதல், 3 நுண்உர செயலாக்கம் மையங்கள் மற்றும் வளமீட்பு மையத்தில் உள்ள இயந்திரங்கள் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம், அனைத்து பிரிவு கடைநிலை பணியாளர்களுக்கும் சீருடைகள் மற்றும் மிதியடிகள் வழங்குதல், டெங்கு கொசு ஒழிப்பு பணிகள், புகைமருந்து அடிக்கும் இயந்திரங்கள் மற்றும் பவர் ஸ்பிரேயர், பேட்டரி ஸ்பிரேயர் ஆகியவைகள் பழுது நீக்கம் மற்றும் சர்வீஸ் செய்தல் ஆகிய பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திட கீழ்க்கண்ட விபரப்படி உத்தேச செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | உத்தேச தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பொது சுகாதாரப்பிரிவில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் தகுதிசான்று மற்றும் பழுதுநீக்கம் செய்தல் | 20.00 |
| 2 | பொது சுகாதாரப்பிரிவில் உள்ள அனைத்து வாகனங்கள் மற்றும் புகைமருந்து அடிக்கும் இயந்திரங்களுக்கு எரிபொருட்கள் செலவினம் மேற்கொள்ளுதல் | 50.00 |
| 3 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி நீர்த்த சுண்ணாம்பு தூள் கொள்முதல் செய்தல் | 4.00 |
| 4 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பிளிச்சிங்பவுடர் கொள்முதல் செய்தல் | 5.00 |
| 5 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பினாயில் கொள்முதல் செய்தல் | 3.00 |
| 6 | மழைகாலங்களில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 |
| 7 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்தல் | 9.90 |
| 8 | அனைத்து பிரிவு கடைநிலை பணியாளர்களுக்கும் சீருடைகள் மற்றும் மிதியடிகள் கொள்முதல் செய்தல் | 3.00 |
| 9 | டெங்கு நோய் தடுப்பு பணிக்காக முதிர்கொசுக்களை ஒழிக்க பயன்படுத்தப்படும் அனைத்து வகையான புகைமருந்து அடிக்கும் இயந்திரங்களுக்கும் சர்வீஸ் மற்றும் பழுதுகள் நீக்கம் செய்தல் | 3.00 |
| 10 | டெங்கு நோய் தடுப்பு பணிக்காக மழைநீர் வடிகால்களில் உருவாகும் கொசுப்புழுக்களை லார்வா ஒழிக்க பயன்படுத்தப்படும் அனைத்து வகையான ஸ்பிரேயர் இயந்திரங்களை சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்தல் | 3.00 |
| 11 | டெங்கு நோய் தடுப்பு பணிக்காக முதிர்கொசுக்கள் மற்றும் கொசுப்புழுக்களை ஒழிக்க பயன்படுத்தப்படும் கிருமிநாசினியான பைரித்ரம் 2 %, மாலத்தியான் 50 EC மற்றும் டெமிபாஸ் (அபேட்) கொள்முதல் செய்தல் | 9.90 |
| 12 | டெங்கு நோய் தடுப்பு பணிக்காக மழைநீர் வடிகால்களில் உருவாகும் லார்வா கொசுப்புழுக்களை ஒழிக்க பயன்படுத்தப்படும் கிருமிநாசினியான B.T பவுடர்களை கொள்முதல் செய்தல் | 9.90 |
| 13 | தூய்மை இந்தியா திட்டம், டெங்கு நோய் தடுப்பு, போதைபொருள் ஒழிப்பு, ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொட்கள் ஒழிப்பு ஆகியவை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல் | 7.00 |

| வ.எண் | பணியின் விபரம் | உத்தேச தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 14 | நகராட்சிக்கு சொந்தமான நுண்உரமைய செயலாக்கம் மற்றும் வளமீட்பு மையத்தில் உள்ள இயந்திரங்களுக்கு சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்தல் | 9.90 |
| 15 | நகராட்சி பகுதியில் குப்பைகள் சேகரம் செய்தல் பணிகளை தினசரி எடை கணக்கீடு செய்ய புதியதாக மின்னனு எடை இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 2.00 |
| 16 | செழிப்பு என்ற பெயரில் நுண் உர செயலாக்க மையத்தில் உருவாகும் இயற்கை உரங்களை துணிப்பைகள் அல்லது காகித பைகள் அச்சடித்து (1 கிலோ முதல் 5 கிலோ வரை) பயன்படுத்துவதற்கு | 3.00 |
| 17 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி BIO Composter கொள்முதல் செய்தல் | 9.90 |
| 18 | நகரப்பகுதியில் உள்ள பிரதான சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர் வாருதல் செயின் பொக்லைன் (Hitachi) மற்றும் நவீன வாகனங்களைக் கொண்டு பணி மேற்கொள்ளுதல் | 9.90 |
| 19 | நகரப்பகுதியில் உள்ள சிறிய மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுதல் | 9.90 |
| 20 | பிறப்பு இறப்பு பதிவுகள் மேற்கொள்ள அனைத்து விதமான படிவங்கள் அச்சடித்தல் | 5.00 |
| 21 | பொது சுகாதார சட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், பிளாஸ்டிக் மேலாண்மை திட்டம், டெங்கு கொசு ஒழிப்பு அபராதகட்டணம் ரசீது அச்சடித்தல் பணிக்கு | 5.00 |
| 22 | முதல்வரின் காலை சிற்றுண்டி திட்டத்தினை மேற்கொள்ள உரிய படிவம் மற்றும் பதிவேடுகள் அச்சடித்தல் பணிக்கு | 5.00 |
| 23 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான ஈக்கொல்லி மருந்து கொள்முதல் செய்தல் | 9.90 |
| | மொத்தம் | 207.10 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 515/2025/எச்1 )**

**பொருள் எண் : 19**

கள்ளக்குறிச்சி நகராட்சியானது அரசாணை (நிலை) எண் 57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.5) துறை நாள் 02.05.2023இன்படி முதல் நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்படும் சொத்து வரி தொகையில் கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாக செலவினங்கள் அடிப்படையில் சொத்துவரியில் அடங்கிய விகிதாச்சார கூறுகள் (COMPONENTS OF TAXES) வசூல் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நடத்தப்பட்ட வரிவசூல் ஆய்வுக் கூட்டங்களில் நகராட்சிப் பகுதிகளில் செயல்பட்டு வரும் அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான பள்ளிகளை நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளவும், அப்பள்ளிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தற்போது வசூல் செய்யும் சொத்து வரியில் கல்வி வரித்தொகையினை பிரித்து வசூல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**தற்போது நடைமுறையில் உள்ள பொது விகிதாச்சாரக் கூறுகள்**

| வ.எண் | வரியின விபரம் | வசூல் செய்யப்படும் விகிதாச்சார கூறுகள் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பொது வரி | (பொது நோக்கம், சுகாதாரம், தெரு விளக்கு உள்பட) | 8 |
| 2 | குடிநீர் மற்றும் வடிகால் வரி | -- | 3 |
| 3 | கல்வி வரி | -- | 0 |
| 4 | நூலக வரி | -- | 1.10 |
| | | **கூடுதல்** | **12.10** |

தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சிப் பகுதியில் 10 ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அனைத்து ஊராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அனைத்து ஊராட்சிக்கு சொந்தமான பள்ளிகளையும் நகராட்சி வசம் ஒப்படைக்க கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளில் அனைத்து ஊராட்சிக்கு சொந்தமான பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சொத்து வரியில் ஏற்கனவே வசூலிக்கப்படு வரும் விகிதாச்சார கூறுகளோடு கல்வி வரி என தனியே விகிதாசாரக் கூறினையும் சேர்த்து பிரித்து வசூல் செய்ய கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்படவுள்ள பொது விகிதாச்சார கூறுகள்**

| வ. எண் | வரியின விபரம் | தற்போது வசூல் செய்யப்படும் சதவீதம் | தற்போது திருத்தி அமைக்கப்படும் சதவீதம் |
|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 8 | 10 |
| 2 | குடிநீர் மற்றும் வடிகால் வரி | 3 | 3 |
| 3 | கல்வி வரி | 0 | 2 |
| 4 | நூலக வரி | 1.10 | 1.50 |
| | **கூடுதல்** | **12.10** | **16.50** |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்டவாறு பொது வரியில் கல்வி வரியினை திருத்தியமைத்து சொத்து வரியில் வசூல் செய்யப்படும்போது பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அரசிடமிருந்து இணை மான்யம் பெறவும் வழிவகை உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1970/2019/அ1)**

**பொருள் எண் : 20**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ4/1340/2025, நாள்.23.04.2025ல் கள்ளக்குறிச்சி மற்றும் ஏமப்பேர் நகர பகுதிகளில் நகராட்சிக்குட்பட்ட அரசு புறம்போக்கு (கீழ்கண்டவாறு) நிலங்களில் உள்ள 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வரும் நபர்களின் ஆக்கிரமிப்புகளையும் வரன்முறைப்படுத்தும் சிறப்புத்திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கிட கீழ்கண்ட புல எண்களை தேர்வு செய்து அதற்கான தீர்மானம் நிறைவேற்றி அறிக்கை அனுப்புமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | நகராட்சி பெயர் | புல எண் | வகைபாடு |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | 51/1-0.93.50 | பாதை |
| 2. | | 52/-0.63.00 | பாதை |
| 3. | ஏமப்பேர் | 411/-0.50.50 | நத்தம் (தெரு) |

மேற்கண்ட புல எண்களில் வீட்டுமனை பட்டா வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அரசாணை (நிலை) எண்.318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்.30.08.2019.
2. அரசு கூடுதல் முதன்மை செயலர் அவர்களின் சுற்றறிக்கை எண்.934409/LD - 1(1)/2025-1, Date:04.03.2025.
3. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ஆ1/10057/2021 நாள்:28.02.2025.
4. பார்வை 1 முதல் 3 வரை கண்டுள்ள அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகளின்படி வீட்டுமனை பட்டா வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.295/2025/எப்1)

**பொருள் எண் : 21**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022 ன் கீழ் வார்டு எண்.10 சீத்தாராம் நகர் பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் 2024-2025 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை பட்டில் படி வழங்கிடவும், மேலும் 2025-2026 ஆம் ஆண்டிற்கு அவ்வபோது ஏற்படும் சில்லைரை செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள **ரூ.75000**/-(ரூபாய் எழுபத்தி ஐம்மதாயிரம் மட்டும்) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி அல்லது நகராட்சி நூலக நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.515/2024/எப்2)**

**பொருள் எண் : 22**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையில் 114-க்கும் பகுதியில் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 0564 / 2025 / இ2)**

**பொருள் எண் : 23**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை 89க்கும் பகுதியில் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 0565 / 2025 / இ2)**

## பொருள் எண் : 24

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பொது இடங்கள், பிரதான சாலைகள், சாலைகளின் நான்கு முனை சந்திப்புகள் முக்கியமான சாலைகள் ஆகிய பகுதிகளில் தற்போது பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் (LED – 20 Watts) போதிய வெளிச்சம் இல்லாமல் உள்ளதால், இரவு நேரங்களில் போக்குவரத்திற்கும், பொதுமக்களும் ஏற்படும் சிரமத்தை தவிர்த்திடும் வகையில், மேற்படி வார்டுகளில் கீழ்க்காணும் பகுதிகளில் புதியதாக சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்குகள் (Mini High Mast) அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 01 to 07 வார்டுகளுக்கு தலா 2 எண்ணிக்கை வீதம் (7x2 = 14) | 14 |
| 2. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை நுழைவு வாயில் | 1 |
| 3. | அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை உட்புறம் | 1 |
| 4. | கச்சிராயபாளையம் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளி அருகில் | 1 |
| 5. | நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகம் (நேப்பால் தெரு) | 1 |
| **மொத்தம்** | | **18** |

மேற்படி, சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்கள் (Materials) அனைத்தும், M/s. ரிலையன்ஸ் (JIO) என்ற நிறுவனம் தனது சொந்த செலவில் வழங்குவதற்கு (Sponsor) இசைவு தெரிவித்துள்ளது. மேலும், மேற்படி உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்களை மட்டும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, கேபிள் ஒயர்கள், மின் இணைப்புகள், உயர் கோபுர மின் விளக்குகளை பொருத்துதல் பணி மற்றும் இதர உபகரணங்களுக்கான செலவினத்தை நகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 578/ 2025 / இ2)**

## பொருள் எண் : 25

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பொது இடங்கள், பிரதான சாலைகள், சாலைகளின் நான்கு முனை சந்திப்புகள் முக்கியமான சாலைகள் ஆகிய பகுதிகளில் தற்போது பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் (LED – 20 Watts) போதிய வெளிச்சம் இல்லாமல் உள்ளதால், இரவு நேரங்களில் போக்குவரத்திற்கும், பொதுமக்களும் ஏற்படும் சிரமத்தை தவிர்த்திடும் வகையில், மேற்படி வார்டுகளில் கீழ்க்காணும் பகுதிகளில் புதியதாக சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்குகள் (Mini High Mast) அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 08 to 14 வார்டுகளுக்கு தலா 2 எண்ணிக்கை வீதம் (7x2 = 14) | 14 |
| 2. | சிறுவங்கூர் சாலை செல்லும் வழி அம்பேத்கார் சிலை அருகில் | 1 |
| 3. | துருகம் சாலை மயானம் அருகில் | 1 |
| 4. | துருகம் சாலை கோமுகி ஆற்று பாலம் | 2 |
| **மொத்தம்** | | **18** |

மேற்படி, சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்கள் (Materials) அனைத்தும், M/s. ரிலையன்ஸ் (JIO) என்ற நிறுவனம் தனது சொந்த செலவில் வழங்குவதற்கு (Sponsor) இசைவு தெரிவித்துள்ளது. மேலும், மேற்படி உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்களை மட்டும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, கேபிள் ஒயர்கள், மின் இணைப்புகள், உயர் கோபுர மின் விளக்குகளை பொருத்துதல் பணி மற்றும் இதர உபகரணங்களுக்கான செலவினத்தை நகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 579/ 2025 / இ2)**

## பொருள் எண் : 26

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பொது இடங்கள், பிரதான சாலைகள், சாலைகளின் நான்கு முனை சந்திப்புகள் முக்கியமான சாலைகள் ஆகிய பகுதிகளில் தற்போது பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் (LED – 20 Watts) போதிய வெளிச்சம் இல்லாமல் உள்ளதால், இரவு நேரங்களில் போக்குவரத்திற்கும், பொதுமக்களும் ஏற்படும் சிரமத்தை தவிர்த்திடும் வகையில், மேற்படி வார்டுகளில் கீழ்க்காணும் பகுதிகளில் புதியதாக சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்குகள் (Mini High Mast) அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 15 to 21 வார்டுகளுக்கு தலா 2 எண்ணிக்கை வீதம் (7x2 = 14) | 14 |
| 2. | நகராட்சி தொடக்க பள்ளி வளாகம், ஏமப்பேர் காலனி | 1 |
| 3. | ஏமப்பேர் பேருந்து நிறுத்தம் அருகில் | 1 |
| 4. | ஏமப்பேர் பூங்கா படகு சவாரி | 1 |
| 5. | பெருமாள் கோவில் முன்புறம் | 1 |
| **மொத்தம்** | | **18** |

மேற்படி, சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்கள் (Materials) அனைத்தும், M/s. ரிலையன்ஸ் (JIO) என்ற நிறுவனம் தனது சொந்த செலவில் வழங்குவதற்கு (Sponsor) இசைவு தெரிவித்துள்ளது. மேலும், மேற்படி உயர் கோபுர மின் விளக்கு உபகரணங்களை மட்டும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, கேபிள் ஒயர்கள், மின் இணைப்புகள், உயர் கோபுர மின் விளக்குகளை பொருத்துதல் பணி மற்றும் இதர உபகரணங்களுக்கான செலவினத்தை நகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 580/ 2025 / இ2)**

## பொருள் எண் : 27

கள்ளக்குறிச்சி நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் அலுவலக பணிகளுக்காக தேவைப்படும் பதிவேடுகள், படிவங்கள், A4 Paper, Legal Paper மற்றும் எழுதுப்பொருட்கள் 2025–2026 ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட் கோ சர்வ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00/– (பத்து இலட்சம்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1257/2024/டி1)**

## பொருள் எண் : 28

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் தனி வட்டாட்சியர், (நில எடுப்பு), தென்னக ரயில்வே, கள்ளக்குறிச்சி அவர்களின் கடிதம் ந.க.அ1/25/2025, நாள்.09.05.2025ல் கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை புதிய அகல ரயில் பாதை அமைக்க தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலக்கையகம் சட்டம் 1997–ன் கீழ் நிலக்கையகம்/ நில உரிமை மாற்றம் செய்தல் கூடுதல் புலன்கள் பிரிவு 3(2) விளம்பரம் செய்யப்பட்டது கீழ்கண்ட புல எண்களை தேர்வு செய்து அதற்கான தீர்மானம் நிறைவேற்றி அறிக்கை அனுப்புமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | புல எண் | வகைபாடு | மொத்த பரப்பு | நிலக்கையக புல எண் | கையகப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 159 | சாலை | 1.37.50 | 159/2 | 0.28.45 |
| 2. | 232/12 | ஏரி நீர் பிடிப்பு | 0.47.00 | 232/23 | 0.00.12 |

மேற்கண்ட புல எண்களில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை புதிய அகல ரயில் பாதை அமைக்க தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலக்கையகம் சட்டம் 1997–ன் கீழ் நிலக்கையகம்/ நில உரிமை மாற்றம் செய்தல் கூடுதல் புலன்கள் பிரிவு 3(2) மேற்கண்ட கள்ளக்குறிச்சி கிராம புலன்கள் நிலக்கையகம் செய்யும் பொருட்டு நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அரசாணை (பல்வகை) எண்.49 போக்குவரத்து (I–1) துறை நாள்.05.05.2016, ன்படி சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை அகல ரயில் பாதை அமைத்திட நிலம் கையகம் படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**295/2025/எப்1)**

**பொருள் எண் : 29**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையில் பகுதியில் 105–க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர், அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 0566 / 2025 / இ2)**

**பொருள் எண் : 30**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025–2026–ன் கீழ் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ் காணும் விவரப்படியான திட்டப்பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் கண்காணிப்பு குழுவின் 21–வது கூட்ட நடவடிக்கை (Minutes of the 21[th] Meeting Common Project Sanction and Monitoring Committee) நாள். 30.04.2025 –ல் நிர்வாக அனுமதி வழங்கி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, விரவம் கீழ் வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி ஏமப்பேர் கிராமம், சர்வே எண். 63, 64/2A, 2B, 3A, 3B, 4B, 4A, 5A, 5B, 65/1A, 70/9, 70/10, 70/11, 73/1, 73/2, 73/3, 73/8, 73/9, 73/10 மற்றும் 73/11–ல் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல் பணி | 1621.00 |
| 2 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11, சர்வே எண். 474N/2–ல் புதிய தினசரி நாளங்காடி கட்டுதல் பணி | 909.00 |
| 3 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துதல் பணி | 2100.00 |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 070 / 2025 / இ1)**

**பொருள் எண் : 31**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **குடிநீர்நிதி 2024–2025** ஆம் ஆண்டின் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E–Tendering) முறையில் 15.04.2025–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | விளாந்தாங்கல் சாலை பகுதியில் UPVC குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் பணி (வார்டு எண்.14) | ரூ. 3,00,000/– | திரு.M.சரோஜா, கள்ளக்குறிச்சி | ரூ.2,86,161/– 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி.எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | ரூ.2,95,785/– 2.90% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | எம்.ஆர்.எண். நகர் பகுதியில் புதிய போர்வெல் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யும் பணி (வார்டு எண்.10) | ரூ. 3,00,000/– | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | ரூ.2,74,012/– 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | ரூ.2,88,899/– 5.23% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கருணாபுரம் மாரியம்மன் கோவில் தெருவில் ஏற்கனவே உள்ள கை பம்பில் (அடி பம்பு) புதிய மின் மோட்டார் பொருத்தி, சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.08) | ரூ. 2,00,000/– | திரு.A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | ரூ.1,83,891/– 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | ரூ. 1,93,243/– 4.92% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 1770 / 2024 / இ2)**

**பொருள் எண் : 32**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் 26 எண்ணிக்கையில் சமுதாய கழிவறை மற்றும் 3 எண்ணிக்கையில் பொதுக்கழிவறைகள் என மொத்தமாக 29 எண்ணிக்கை கழிவறைகள் உள்ளது. கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில்தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் நடைப்பெற்றுவரும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் திரவகழிவு மேலாண்மை பணிகளை மதிப்பீடு செய்து திறந்தவெளியில் மலம் கழிக்காத நகராட்சி என்றும், குப்பையில்லா நகராட்சி என்றும் சான்று வழங்குவதற்கு கள ஆய்வுப்பணி Swachh Survekshan 2023-2024 நடைப்பெற்று வருகிறது.

எனவே, மேற்படி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சமுதாய மற்றும் பொதுக்கழிவறைகளில் உள்ள பழுதுகள், தண்ணிர் வசதிகள், மின் வசதிகள், மின்விளக்கு வசதி மற்றும் இதர பழுதுகள் நீக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மேற்படி நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய கழிவறையை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தப்பின்பு அக்கழிவறைகளை தொடர்ந்து காண்காணிக்கும் பணிக்கு நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் சமூக விரோதிகளாள் சேதப்படுத்தி பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களால் பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டு தேவையற்ற சமூக விரோத செயல் நடக்கும் கூடாரமாக ஏற்படுகிறது. இதனால் நகராட்சிக்கு ஆண்டு தோரும் கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

எனவே, மேற்படி நகராட்சி பகுதியில் உள்ள 26 சமுதாய கழிவறைகளை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து அக்கழிவறைகளை தொடர்ந்து கண்காணிக்கும் பணிக்கு பதிவு பெற்ற சுய உதவி குழுவின் 26 நபர்கள் வழி மேற்கொள்ள நியமனம் செய்யலாம். நியமனம் செய்யும் பணியாளர்களுக்கு மாதம் தல ரூ.3,000/- வீதம் ஊதியம் வழங்கலாம். இப்பணிகள் மேற்கொள்ள ஆறு மாத காலத்திற்கு ஏற்படும் தோராய செலவின தொகை ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண். 0597 / 2025 / எச்1)**

**பொருள் எண் : 33**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் திரவகழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் 22 எண்ணிக்கையிலும், ஒப்பந்த வெளிக்கொணர்வு முகமையின் வழியே 130 எண்ணிக்கையிலும், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் 52 எண்ணிக்கையிலும், தூய்மை பாரத திட்ட மேற்பார்வையாளர் மற்றும் பரப்புரையாளர்கள் 5 எண்ணிக்கையிலும் என மொத்தம் 209-நபர்கள் மூலம் நகர் பகுதியில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி, தூய்மை பணியாளர்களை உரிய நேரத்தில் வருகை பதிவு பெற்று பணிதளத்திற்கு அனுப்பவும், தூய்மை பணிகளை தொடர்ந்து கண்காணிக்கவும் 21 வார்டு பகுதியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களை ஐந்து கோட்டப்பிரிவுகளாக பிரித்து அவர்களுக்கு கோட்டப்பிரிவு அறைகள் மற்றும் தூய்மை பணியாளர்களின் உபகரணங்கள் பாதுகாப்பாக வைக்கவும் அறைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | கோட்டப்பிரிவு அலுவலக அறை அமையவுள்ள இடம் | கோட்டப்பிரிவு அலுவலகம் உள்ளடக்கிய வார்டுகள் |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் உட்பகுதியில் (சுகாதார அலுவலர் பிரிவு அலுவலகம் மற்றும் கோட்டபிரிவு அறை) | வார்டு எண்.08,09,10 மற்றும் 16 ஆகிய வார்டுகள் |
| 2 | காந்தி ரோடு பகுதியில் (சக்தி விநாயகர் கோவில் அருகில்) | வார்டு எண்.05,06 மற்றும் 07 ஆகிய வார்டுகள் |
| 3 | கேசவலு நகர் பகுதியில் (நகராட்சி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகப்பகுதியில்) | வார்டு எண்.01,02,03,04,13 மற்றும் 14 ஆகிய வார்டுகள் |
| 4 | கவரை தெரு பகுதியில் (நகராட்சி கிணறு வளாகப்பகுதியில்) | வார்டு எண்.11,12,15 மற்றும் 18 ஆகிய வார்டுகள் |
| 5 | அண்ணா நகர் பகுதியில் (நகராட்சி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகப்பகுதியில்) | வார்டு எண்.17,19,20 மற்றும் 21 ஆகிய வார்டுகள் |

மேற்படி நகராட்சி பகுதியில் தூய்மை பணியாளர்களை ஐந்து கோட்ட பிரிவுகளாக பிரித்து தூய்மை பணியாளர்களை பணி தளத்திற்கு விரைவாக அனுப்பவும், தூய்மை பணியை தொடர்ந்து கண்காணிக்கவும், தூய்மை பணியினை உடனுக்குடன் துரிதமாக மேற்கொள்ள ஏதுவாகவும் அமையும். எனவே, மேற்படி ஐந்து இடங்களில் கோட்டப்பிரிவு அறைகள் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 0598 / 2025 / எச்1)**

R. [signature]

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**